DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Deposition of Witness

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - வெங்கடாஜலபதி | **PW-3** | வயது |
| த/க பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலூக்கா |
| மாவட்டம் | | | |

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் அந்தியூரில் வசித்து வருகிறேன். நான் பத்திரம் எழுதும் தொழில் செய்து வருகிறேன். அம்மாபேட்டையில் அலுவலகம் வைத்துள்ளேன். நான் பத்திரம் எழுதுவதற்கு தமிழ்நாடு அரசின் உரிமம் பெற்றுள்ளேன். அதன் பதிவு எண்.A/1480/ERD/1999 ஆகும். என்னிடம் காட்டப்படும் 08.01.2004ம் தேதியிட்ட உயில் சாசனத்தின் சான்றிட்ட நகலில் ஆவணம் தயாரித்தவர் என்ற இடத்தில் எனது பெயர்தான் போடப்பட்டுள்து. அதில் உள்ள கையொப்பம் எனது ஆகும்.

2) கடந்த 08.01.2004ம் தேதி இவ்வழக்கின் 3வது எதிரி அங்கமுத்து என்கிற தங்கராஜ் என்பவர், அம்மாபேட்டையில் உள்ள என்னுடைய அலுவலகத்திற்கு வந்தார். தன்னுடைய சித்தப்பா தனக்கு உயில் எழுதி வைப்பதாக சொன்னார். நான் அவரிடம் உயில் எழுதி வைப்பவர் நேரடியாக வரவேண்டும் என்றும், இரண்டு சாட்சிகளை கூட்டிக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னேன். அதன் பிறகு 1 அல்லது 1.30 மணி நேரம் கழித்து குருசாமி என்பவரையும், இரண்டு சாட்சிகளையும் கூட்டிக் கொண்டு வந்தார்.

குருசாமி, சேமலைக்கவுண்டர் மற்றும் மற்றொரு குருசாமி ஆகியோரை கூட்டிக் கொண்டு வந்தார். நான் அவரிடம் பெயரைக் கேட்டபோது குருசாமி என்று சொன்னார். அழைத்து வந்த மற்றொரு சாட்சியிடம் கேட்டபோது குருசாமி என்று சொன்னார்.

3) நான் உயில் எழுதி வைத்த குருசாமியிடம், உயில் குறித்த வாசகங்கள் கேட்டு, உயில் ஆவணம் தயார் செய்து கொடுத்தேன். மேற்படி உயில் ஆவணத்தை என்னுடைய அலுவலகத்தில் வைத்து எனது தட்டச்சர் சசிக்குமார் என்பவரை வைத்து தட்டச்சு செய்தேன். தட்டச்சு செய்த உயில் ஆவணத்தை படித்துக் காட்டினேன். அதில் குருசாமி என்பவர் கைரேகை வைத்தார். அதில் சேமலைக்கவுண்டர் மற்றும் மற்றொரு குருசாமி ஆகியோர் சாட்சிக் கையெழுத்து செய்தார்கள். மேற்படி சேமலைக்கவுண்டர் மற்றும் சாட்சி குருசாமி ஆகியோரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்(5 ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. 4 வது எதிரி இறந்துவிட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது). ஆவணம் தயார் செய்து கொடுத்தவுடன் பத்திர அலுவலகத்தில் மேற்படி ஆவணத்தை பதிவு செய்து கொள்வதாக அவர்கள் வாங்கிக் கொண்டு சென்று விட்டார்கள். நான் தயார் செய்து கொடுத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் நீதிமன்றத்தில் அ.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பின்னிட்டு மேற்படி உயிலை எழுதிக் கொடுத்த குருசாமி என்பவருக்கு பதிலாக வேறு ஒருவர் வந்து கையெழுத்து போட்டதாக என்னிடம் சொன்னார்கள். மேற்படி உயிலை எழுதிக் கொடுத்த குருசாமி என்பவரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால், அதை பார்த்ததற்கு பிறகு தான் முடிவு செய்ய முடியும்(இன்று 3 வது எதிரியைத் தவிர, பிற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை). இந்த வழக்கு தொடர்பாக என்னை அம்மாபேட்டை போலீசார் விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

5) பொதுவாக ஆவணம் எழுத என்னை அணுகுகின்றவர்களின் அடையாளத்தை உறுதி செய்த பிறகுதான் ஆவணம் எழுத வேண்டும் என்றால், சரிதான். அன்றைய தினம் மேற்படி ஆவணத்தை எழுத வந்தவர்களின் அடையாளத்தை உறுதி செய்த பிறகுதான் ஆவணத்தை எழுத ஆரம்பித்தேன் என்றால், சரியல்ல, அவர்கள் சொன்னதை வைத்து

எழுத ஆரம்பித்தேன். அடையாளத்தை உறுதி செய்த பிறகு ஆவணம் எழுத வேண்டும் என்ற கடமையை நான் தவற விட்டு விட்டேன் என்றால், சரியல்ல, அன்று அந்த நடைமுறை இல்லை. பொதுவாக ஆவணம் எழுதுவதற்கான உரிமம், சரியான நபர்களிடம், சரியான தகவல்களைப் பெற்று, சரியான ஆவணங்களைத் தயார் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தான் வழங்கப்படுகிறது என்றால், சரிதான். மேற்படி நடைமுறை என்னால் பின்பற்றப்படாவிட்டால் எனக்கு வழங்கப்படும் உரிமம் ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் எனக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் என்னுடைய கடமையை, மேற்படி ஆவணத்தை தயார் செய்தபோது மீறிவிட்டேன் என்றால், சரியல்ல, அப்போது அந்த நடைமுறை இல்லை.

6) என்னிடம் உயில் எழுத வந்தவர் குருசாமிதான் என்பதை அவர் சொன்ன தகவல்களின் அடிப்படையில் ஊர்ஜிதம் செய்து கொண்டேன். என்னிடம் உயில் எழுத வந்தவர் படிப்பறிவில்லாத நபர் என்றால், சரிதான். அவருக்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் 'சி' பாக சொத்தாக ஒதுக்கப்பட்ட சொத்தைத்தான் உயில் எழுதி வைத்தார் என்பதை பாகப்பிரிவினை ஆவணத்தைப் பார்த்து தெரிந்து கொண்டு உயில் ஆவணத்தை எழுதினேன் என்றால், ஆவணத்தைப் பார்த்தும், அவர் சொன்னதன் அடிப்படையிலும் எழுதினேன். என்னை போலீசார் கடந்த சனிக்கிழமை 19.11.2022 ம் தேதி விசாரித்தார்கள். அப்போதுதான் மேற்படி விவரத்தை தெரிந்து கொண்டேன். அதற்கு முன்பு மேற்படி உயிலைப் பொறுத்து போலீசார் எப்போதும் என்னை விசாரிக்கவில்லை என்றால், சரிதான்.

7) கையெழுத்து மாற்றிப் போடப்பட்ட விவரம் எனக்கு போலீசார் சொல்லிக் கொடுத்துதான் தெரியும் என்றால், சரியல்ல, இதற்கு முன்பு பவானி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது தெரிந்து கொண்டேன். அந்த விவரம் உண்மையா, பொய்யா என்று எனக்குத் தெரியாது என்றால், சரிதான். உயில் எழுதி 18 வருடங்கள் ஆகிவிட்டதால் உயில் எழுத வந்தவரையும், சாட்சிக் கையெழுத்து செய்ய வந்தவர்களையும், இவர்கள் என்று அடையாளம் சொல்ல முடியாது என்றால், சரிதான். பவானி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க செல்லும்போதே, உயில் எழுத வந்த குருசாமி இறந்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். அ.சா.ஆ.5 ல் மேற்படி ஆவணம் பதிவு

செய்யப்பட்டபோது குருசாமியின் வாக்காளர் அடையாள அட்டை பரிசீலனை செய்யப்பட்டதாக உறுதி செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி காலகட்டத்தில் ஆவணங்கள் பதிவு செய்யும் போது அடையாள ஆவணங்களை ஊர்ஜிதம் செய்யும் நடைமுறை இல்லை என்று நான் கூறுவது தவறு என்றால், பதிவு செய்யும்போது மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8) பொதுவாக ஒரு ஆவணம் பதிவு செய்யும்போது, அதை பதிவு செய்வதற்கு பதிவு அலுவலகத்தில் என்னென்ன ஆவணங்கள் கேட்பார்கள் என்பதை பத்திரம் எழுத வரும் நபர்களிடம் தெரிவித்து, கொண்டு வரச் செய்து, அந்த ஆவணங்களைப் பார்வையிட்ட பிறகுதான் பத்திரம் எழுதுவோம் என்றால், சரிதான். மேற்படி உயில் பத்திரம் எழுதப்படும்போது, குருசாமியின் அடையாள அட்டை என்னிடம் கொண்டு வந்து தரப்பட்டு, அதை நான் பரிசீலனை செய்த பிறகு, மேற்படி ஆவணம் எழுதப்பட்டதற்கான வாய்ப்பு உள்ளது என்றால், அது குறித்து தற்போது ஞாபகம் இல்லை. நான் ஞாபகம் இல்லை என்று இவ்வழக்கின் சாட்சி அ.சா.1 குருசாமி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

9) நான் இதுவரை எத்தனை நீதிமன்றங்களில் எத்தனை வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சுமார் 8 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். நான் பவானியில் இந்த வாரம் வெள்ளிக்கிழமை சாட்சியம் அளிக்க உள்ளேன். சங்ககிரியில் எப்போது சாட்சியம் அளிப்பேன் என்று தெரியவில்லை. நான் ஆவணங்களை எழுதிக் கொடுத்துவிட்டு, அதற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் தான், அடிக்கடி நான் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் இன்றைக்கு மேற்படி சாட்சி குருசாமி வந்துள்ளாரா என்றால், நான் வெளியே பார்த்தேன். அவர்தான் என்னை சாட்சியம் அளிக்க கூட்டி வந்துள்ளார் என்றால், சரியல்ல. குருசாமிக்கு பதிலாக வேறு ஒரு நபர் கைரேகை வைத்துவிட்டார் என்று நான் போலீசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

மாற்றிக் கையெழுத்து போட்டதாக கூறப்படுவதற்காக நான் கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது என்றால், சரிதான். எனக்கு மேற்படி விவரங்கள் குறித்து எதுவும் தெரியாததால் கருத்து சொல்ல முடியாது என்றால், சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

10) போலீசார் என்னை விசாரித்தபோது, குருசாமி என்று கையெழுத்து போட்டவர் தங்கராசுவின் அப்பா 1 வது எதிரியான சின்னப்பகவுண்டர் என்று தெரிந்து கொண்டதாக கூறிவிட்டும், குறுக்கு விசாரணையின்போது எதிரிகளை அடையாளம் காட்ட முடியாது என்றும் எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**